2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 10/2020*), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/ 2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், என்ன சொல்லுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தை முற்றிலும் முரண்பாடான சட்டமாக நான் கருதுகிறேன். இப்போதுள்ள நிலை என்னவென்றால், சட்டக் கல்லூரி முதல்வர், சட்டக் கல்லூரி பேராசிரியர்,* Law Department–*ன்* Deputy Secretary *ஆக இருக்கிறவர்கள்தான்* Registrar–*ஆக வர முடியும் என்ற ஒரு நிலைமை. ஆனால், இந்தத் திருத்தச் சட்டம் யாரைக் கொண்டு வருகிறதென்றால், சாதாரணமாக* M.L. *படித்தவர்கள், அனுபவம் இல்லாதவர்களையே நியமிக்கலாம் என்றிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஏற்கெனவே, எல்லாப் பேராசிரியர்களுக்கும், துணை பேராசிரியர்களுக்கும்* Ph.D. *கட்டாயமாக இருக்க வேண்டுமென்று* UGC *வலியுறுத்தியிருக்கின்றது. இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற* Assistant Professor–*க்குகூட* Ph.D., *இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு* Ph.D. holders–*ம்* apply *செய்திருக்கிறார்கள். ஆனால், இதற்கு முற்றிலும் முரண்பாடாக, சாதாரண* M.L. *படிப்பு படித்தவர்கள், 55 சதவிகிதம் இருக்கிறவர்கள்* Registrar *ஆக வரலாம் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒரு* Registrar *என்பவர் எல்லாத் திறமைகளையும், நிருவாகத் திறமைகளையும் கொண்டு அனுபவம் வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும். "A" பிரிவில் 55 சதவிகிதம் பெற்ற* M.L. *படித்தவர்கள் இருக்கலாம் என இருக்கிறது. அவர்கள் எத்தனை வருடங்கள் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் சொல்லவும் இல்லை, வலியுறுத்தவுமில்லை.*

---

*@ **9–1–2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

2020 ஜனவரி 9] [திரு. எஸ் சுதர்சனம்]

பிற்பகல் 2–35

அடுத்து, other Universities–லிருந்து வரும் நபர்களைக் கூட appoint செய்யலாம் என இருக்கிறது. இந்த Registrar பதவிக்கு வருகிறவர்கள் சட்டம் தெரிந்த நபராக இருந்தால்தான் நன்றாக இருக்கும். சட்டம் தெரியாத நபர்கள் பல்கலைக்கழகங்களை சரிவர நிருவகிக்க முடியாது. காரணம் என்னவென்றால், இந்த University–க்கு for and against, a suit அல்லது case ஏதாவது போடப்பட்டால், Registrar தான் அந்த case–க்காக எல்லா plaintiff–லும் கையெழுத்திட வேண்டும். சட்டம் தெரிந்த நபர்களாக இருந்தால் வசதியாக இருக்கும். மேலும், other Universities–லிருந்து வரும் நபர்களைக்கூட நியமிக்கலாம் என்றிருக்கிறது. 1996, 1998 ஆம் ஆண்டுகளில் எங்கள் ஆட்சிகாலத்தில் தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தில் ratification ஆக Law Department இருக்கலாம் என்றிருக்கிறது. அதிலும்கூட இப்போது பிரச்சினை இருக்கிறது. சட்டத் துறையின் Additional Secretary Cadre–ல் கொண்டுவர வேண்டுமென்பது எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும். ஆகவே, இந்தச் சட்டத்தை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டத் திருத்தம் என்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று, ஏற்கெனவே இருக்கின்ற விதிகளின்படி, அதில் தேர்வு செய்யப்படுபவர்கள் யாருக்கும் விலக்கு அளிக்கப்படவில்லை. கூடுதலாக, இந்தச் சட்டப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பதவிகளுக்கு முறையான ஆட்கள் கிடைக்கவில்லை என்பது ஒரு காரணம். இரண்டாவது காரணம், இங்கு UGC–ஐப் பற்றி சொல்லியிருக்கிறார். UGC–ல் சொல்லப்பட்டிருக்கிற விதிகளை இந்தச் சட்டமுன்வடிவிலே சேர்த்து, கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்றொன்று, Senate–ல் pass செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றால் என்னவாகும் என்று கேட்டிருந்தார். இந்த Senate–ல், உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகளும் இருக்கின்றார்கள். அவர்கள் இதனை தீர்மானமாக நிறைவேற்றி அரசிடம் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். தகுதியுடைய பதிவாளர்கள், பல்கலைக்கழங்களுக்கு

[திரு. சி.வி. சண்முகம்] [2020 ஜனவரி 9

நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள விதிகளின்படி பார்த்தால், தகுதியுடைய நபர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால்தான், கூடுதலான விதிகளை இதில் சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே இருக்கிற விதிகள் உட்பட, துணைப் பதிவாளர் உறுப்பினர் சொன்னதுபோல் 55 சதவிகிதம் தகுதியுடைய—P.G. படித்தவர்கள்தான். அதுமட்டுமல்ல 15 ஆண்டுகாலம் நிருவாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 8 ஆண்டுகள் துணைப் பதிவாளராகவும் பணியாற்றிருக்க வேண்டும். வேறு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து, நிருவாகத்தில் அனுபவம் பெற்றவர்களை இந்த Registrar பதவிக்கு apply செய்யலாம் என்பதுதான் விதி.

அதுமட்டுமல்ல, சட்டக் கல்லூரிகளில் முதல்வராக மூன்று ஆண்டுகாலம் பணிபுரிந்திருந்தால் இந்த பதிவாளர் பதவிக்கு apply செய்யலாம் என்று விதியில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதில் வேறு எந்த நோக்கமும் இல்லை. தகுதியுடையவர்களை சட்டப் பல்கலைக்கழகத்திற்கு நியமிக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1,முகப்புரை,நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.